Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 | யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம் பண்ணுங்கள்; சங். 22:23 | ஜூன் 2024 | No.6

உங்கள் தனிப்பட்ட எழுப்புதல்

Your Personal Revival

James A. Stewart (1910-1975)

ஆண்டவர் தமது பணியை எழுப்புதலடையச் செய்ய வேண்டும் என்பது என் வாழ்க்கையின் பாரமாயிருக்கிறது. அனேக தேவ பிள்ளைகள் ஆண்டவராகிய இயேசுவுக்கு நூறு சதமானம் வாழ்வதற்குப் பதிலாக அரை மனதோடு வாழுகிறார்கள்.

எழுப்புதலின் நாட்கள் முடிந்து போகவில்லை என விசுவாசிக்கிறேன். எனவே ஒரு உலக எழுப்புதலை வாஞ்சித்து அதற்காக ஜெபித்து வருகிறேன். மிகப் பெரிய நிலைநிற்கும் அற்புதமாகிய ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியானவர் தங்கியிருந்து பூமியில் கிரியை செய்தால் சபையின் வல்லமை அப்போஸ்தலர் காலம் போல ஆகக்கூடும்.

தேவன் எல்லா சபைகளிலும் பலத்த அலை அலையான ஆவியானவரின் எழுப்புதலை அனுப்ப விரும்புகிறார். இவ்வாறு மறுபடியும் மறுபடியும் நடைபெறுவதை எங்கள் ஊழியத்தில் காண்கிறோம். அதன் மூலம் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகின்றனர். அவர் தமது திட்டங்களின்படியும் நோக்கங்களின் படியும் தமது மீட்கப்பட்ட மக்கள் மத்தியில் இதை நிறைவேற்றுகிறார். எனவே தேவன் ஒரு பெரிய எழுப்புதலை அனுப்புவார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

தனது குமாரனின் மணவாட்டி எந்தக் காலத்திலும் தாம் எதிர்பார்க்கும் அந்தஸ்திற்குக் குறைவாக வாழ்வதில் தேவன் திருப்தியடைவதில்லை. எந்த மனிதனும் தனது மணவாட்டி தரம் தாழ்ந்திருப்பதில் திருப்தி கொள்வதில்லை. எனவே நம் பிதாவும் தமது சபை பரிசுத்தம், வல்லமை தேவனோடுள்ள உறுதியான உறவு ஆகியவைகளில் அவர் எதிர்பார்க்கும் நிலையில் இருக்க வேண்டும். தரம் குறைந்த பின்வாங்கின சபை அவருக்கு வெட்கத்தைக் கொண்டு வரும். அவர் பரிசுத்தமும் வல்லமையுமுடைய சர்வ வல்ல தேவன்.

நம் அனைவருக்கும் தனிப்பட்ட எழுப்புதல் தேவை!

ஒரு வயதான மெதடிஸ்ட் பரிசுத்தவான் பிரிட்டனில் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சால்க் பீஸ்சினால் தன்னைச் சுற்றி ஒரு மெல்லிய வட்டம் வரைந்துவிட்டு இவ்வாறு கூறினார். "ஆண்டவரே இந்த வட்டத்திற்குள் காணப்படும் ஒவ்வொருவரையும் எழுப்புதலடையச் செய்யும்" என்று ஜெபித்தார். இதுதான் தனிப்பட்ட முறையிலும் செயல் முறையிலும் செய்ய வேண்டியது. இத்தகையான துணிச்சலான செயல்களுக்கு நீங்கள் ஆயத்தமா? உங்களை ஆழமாகவும், முழுமையாகவும் தூய ஆவியானவர் பயன்படுத்தத் தடையாயிருப்பவைகளைக் கண்டு பிடித்து உபவாசித்து ஜெபிக்க ஆயத்தமா?

மூடி மிகத் தெளிவாக, "சபைகளில் அர்ப்பணிக்கப்படாத திரளான சம்பத்து இருக்கிறது, உபயோகப்படாததும் தவறாக பயன்படுத்தப்படுவதுமான அதிகாரமிருக்கிறது, சீயோனிலே திரள் கூட்டம் சொகுசாக வாழ்கிறது, கர்த்தருக்காக சாட்சியாயிருக்க முடியாத சாட்சிகளிருக்கிறார்கள். ஊழியக்காரர்களில் ஆவியானவரின் மேற் கொள்ளும் வல்லமையில்லை, சீஷர்கள் தூரமாகப் பின் செல்லுகிறார்கள், ஒழுங்குகளில் ஜீவனில்லை, உள்ளான ஜீவன் வல்லமை இவற்றிற்குப் பதிலாக சபை இயந்திரமாக செயல்படுகிறது" என்று கூறியிருக்கிறார்.

இதன் விளைவாக அதாவது ஆவியால் நிரப்பப்படாததால் அனேக நம்மவர்கள் விசுவாசிகளாயிருந்தும் கிறிஸ்துவிலுள்ள சொல்லப்படாத ஐசுவரியத்தை இழந்து நிற்கிறார்கள். எல்லையில்லாததும், அளவிடப்படாததுமான அவர்களுக்குரிய வல்லமை சோம்பலாகவும் உபயோகிக்கப்படாமலும் இருக்கிறது. உணர்வடைந்து கிறிஸ்துவின் ஆவியினால் மட்டும் நிரப்பப்பட்டு அவரது கட்டுப்பாட்டின் பிரசன்னத்திற்காகக் காத்திருப்போம்.

தேவன் தமது வல்லமையை எபேசியர் முதல் அதிகாரத்தில் கூறியிருக்கிறார். தேவனுடைய அளவு கடந்த சத்துவம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, வானங்களுக்கு மேலாக உயர்த்தி பிதாவின் வலது பாரிசத்தில் சிங்காசனத்தில் உட்காரச் செய்தது. தமது உடன்படிக்கையின் ஜனங்களுக்கு எகிப்திலிருந்து விடுதலை கொடுத்தது இந்த தேவ வல்லமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்த அளவற்ற மகா பெரிய உயிர்த்தெழுதலின் வல்லமை, தூய ஆவியானவர் மூலம் சபையின் வாழ்விலும் அதன் கிரியையிலும் பங்களிக்கிறதாயிருக்கிறது.

ஆவியால் நிறைந்த ஒரு வாழ்வின் வல்லமைகளை எண்ணிப் பாருங்கள். (எபேசி.1:17-23) ஆனால் ஏராளமான கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய பிறப்புரிமையை ஒரு கோப்பை பயற்றங் கூழுக்காக விற்று விடுகிறார்கள்.

அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். தூய ஆவியின் செயலால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவ மகிமைக்காக வாழுகிறார்கள். ஆனால் தேவனுடைய ஆழமான அனுபவங்களுக்காக வாஞ்சையும் தாகமுமில்லை. ஆவியால் நிரப்பப்படும் ஆவல் இல்லை. கர்த்தருக்குள் தங்களுக்கிருக்கும் பொக்கிஷங்களை சொந்தமாக்கிக் கொள்ள மனதில்லை. நமது இரட்சகரை நமது சொத்தாக ஏற்றுக்கொள்ளும் போது அவருடையவைகளெல்லாம் நமக்கு சொந்தமாகின்றன. ஆனால் இந்த ஆச்சரியமான வரங்களைப் பெற்று ஆசீர்வாதமான அனுபவங்களைப் பெற நாம் அவற்றை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும்.

ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், ஆண்டவராகிய இயேசுவுக்குள் பொதித்து பரத்தில் வைக்கப்பட்டுள்ளன. பிசாசினால் கண்கள் குருடாக்கப்பட்ட தேவ ஜனங்கள் அறிவீனத்தால், மாம்சீக வாழ்வினால், தங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை உதாசீனப்படுத்தி தங்கள் கிறிஸ்தவ வாழ்வின் சந்தோஷத்தை இழந்து விடுகிறார்கள். ஆண்டவருக்குள்ளிருக்கும் ஆழமான அனுபவங்களுக்குள் செல்ல அவர்களுக்கு விருப்பமில்லை.

மாறாக தாவீது இப்படி ஜெபிக்கிறார்: "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல தேவனே என் ஆத்துமா உம்மையே வாஞ்சித்துக் கதறுகிறது". (சங்.42:1) தேவ பிள்ளைகள் தேவனுக்குரியவைகளில் தாகமும் பசியுமற்றிருக்கிறார்கள். தேவனுடைய உத்தம பணியினை எதிர்பாராமல் அவர்கள் உணர்ச்சிவசப்பட ஆவலா

(5-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

"பிரியமானவனே, (பிரியமானவளே) உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்". 3 யோவான் 2

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 ஜூன் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

நேரடியாக செய்திக்குள் செல்ல வேண்டுமென்று இருந்தேன், ஆனால் பெப்ரவரி மாதம் 19-ம் தியதி திங்கட்கிழமை அருமையான போதகர் ஒருவர் என்னை சந்திக்க வந்தார். 88 வயதாகும் அவர் 24-வது வயதில் வேறு மார்க்கத்திலிருந்து ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, மிக நீண்ட காலமாக குமரி மாவட்டம் சுசீந்திரம் அருகில் A.G. போதகராக பணியாற்றி வருகிறார்.

ஆரம்ப நாட்களில் சபை சம்பந்தமான அனைத்து அச்சடிப்பு வேலைகளுக்கும் நமது அச்சகத்திற்கு வருவார். A.G. ஸ்தாபனத்தில் அதிகமாக அறியப்பட்ட அவர் இப்போது சற்று பெலவீனமாயிருக்கிறார். குறிப்பாக என்னை பார்க்க வேண்டுமென்று போன் பண்ணிவிட்டு அலுவலகம் வந்தார்.

அவர் பெயரில் அனுப்பப்பட்ட வருகையின் தூதன் பத்திரிகையை கையில் வைத்திருந்தார், ஒரு காணிக்கையும் கையில் வைத்திருந்தார். நீண்ட நேரம் பேசிய அவர் கூறிய **மூன்று** காரியங்கள்:

1. **கல்லூரியில் படிக்கும் நாட்களிலேயே மதிய உணவு வேளையில் யாருடைய தொந்தரவும் இல்லாமல் அமைதியாக தூதனை படித்துக் கொண்டிருப்பேன்.**
2. **24 வயது முதல் 88 வயது வரை வாசித்து வருகிறேன்.**
3. **வேத புத்தகத்திற்கு அடுத்தபடியாக நான் ஆவிக்குரிய வாழ்வில் வளருவதற்கு வருகையின் தூதன் பத்திரிகை அதிக பிரயோஜனமாயிருந்தது.**

வருகையின் தூதன் பத்திரிகையை அமைதியான வேளையில் முழுவதுமாக படிக்கிறீர்களா? ஆவிக்குரிய வாழ்வில் நீங்கள் வளர தூதன் பிரயோஜனமாயிருக்கிறதா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : **94897 40295**
அலுவலகம் : **95432 21008**

உங்கள் அன்பு சகோதரன்
வெஸ்லி தேவதாசன்

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்." எசேக். 22:30

"அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, ... அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்."
சங்.106:23

I. தேவனுடைய அழைப்பு

1. மோசே

...தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார்.

"நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்."யாத். 3:4,10.

2. சாமுவேல்

அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார்;

சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண் முதல் பெயர் செபாமட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது (1 சாமு. 3:10,20).

3. ஏசாயா

பின் யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்.

அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன் ஏசா.6:8.

4. எரேமியா

அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றேன்.

ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக... என்று சொன்னார். எரேமியா.2:6,7.

5. ஆமோஸ்

ஆமோஸ் அமத்தியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன்,

ஆனால் மந்தையின் பின்னாலே போகிற போது என்னைக் கர்த்தர் அழைத்து,

நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார் ஆமோ.7:14,15.

6. யோனா

இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர்:

நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார் யோனா 3:1,2.

7. பேதுரு, யாக்கோபு, யோவான்

சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள்.

அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.

அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டு போய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள் லூக்.5:10,11.

அநேக ஆண்டுகளுக்கு முன் ஆண்டவர் ஒரு அருமையான வாலிபனை மிஷனெரி ஊழியத்திற்காக அழைத்தார்.

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரோ தன்னுடைய குடும்ப சூழ்நிலையை அவரிடம் கூறினார். அப்பொழுது அவர் கண்ட காட்சி:

வானத்தில் இரண்டு அழகான கண்கள், அதுபோல அழகான கண்களை அவர் கண்டதே இல்லை. அந்த கண்களில் கண்ணீர், ஆண்டவர் பேசினார்:

Son If you are not none other

மகனே நீ இல்லாவிடில் வேறு யாருமில்லை

கர்த்தருடைய கண்களில் கண்ணீர்!
உங்களுடைய பதில் என்ன?

என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர் தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயர தொனியோ இதை யார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ

II. தேவனுடைய மீட்பின் திட்டம்

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்.

அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ...வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேல்சட்டத்திலும் தெளித்து, யாத்.12:5-7

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ஏசா.53:5.

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: **இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்றான் யோவா.1:29.

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். எபி.9:12.

"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." 1 பேதுரு.1:19

எனது தகப்பனார் பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்கள், கண்ணனூர் C.S.I. சபையில் போதகராயிருந்த போது, "**கல்வாரி எழுப்புதல் ஜெபக்குழு**" ஒன்றை உருவாக்கி, அதில் பயன்படுத்துவதற்காக "**கல்வாரி எழுப்புதல் கீதங்கள்**" என்ற பெயரில் பாடல் புஸ்தகம் ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அந்த பாடல் புத்தகத்தில் 27 பாடல்கள் எனது தகப்பனார் இயற்றியதாகும். அதில் ஒரு பாடலை வாசகருடைய பிரயோஜனத்திற்காக கீழே அச்சிடுகிறேன்.

1. கல்வாரி மாமலைமேல் கை கால்கள் ஆணிகளால்
கடாவப்பட்டவராய் கர்த்தர் தொங்கக் கண்டேன்
குருசின் வேதனையும் சிரசின் முள்முடியும்
குருதி சிந்துவதும் உருக்கிற்றென் மனதை

2. அஞ்சாதே என் மகனே மிஞ்சும் உன் பாவமதால்
நெஞ்சம் கலங்காதே தஞ்சம் நானே உனக்கு
எனக்கேன் இப்பாடு உனக்காகத்தானே
ஈனக்கோலம் அடைந்தேன் உன்னை ரட்சித்தேன்
என்றார்

3. கர்த்தரின் சத்தமதை சத்தியமென்று நம்பி
பக்தியுடன் விழுந்து முத்தம் செய்தேன் அவரை
என் பாவம் நீங்கியதே எக்கேடும் ஓடியதே
சந்தேகம் மாறியதே சந்தோஷம் பொங்கியதே

இயற்றியவர் பாஸ்டர் **S. தேவதாசன்**

III. தேவனுடைய ஆலோசனை

1. ஞானஸ்நானம் தேவனுடைய ஆலோசனை

பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள் லூக்.7:30.

2. ஞானஸ்நானம் எல்லாரும் பெற வேண்டும்

இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள்.

எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் 1 கொரி.10:1,2.

3. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் மாற்.16:16.

4. சீஷராக்கி ஞானஸ்நானம்

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,

நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் மத்.28:19,20.

5. ஞானஸ்நானம் கொடுப்பவரும், எடுப்பவரும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்

இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான் அப்.8:38.

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். மத்.3:16.

6. பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களும் ஞானஸ்நானம் பெற வேண்டும்

அப்பொழுது பேதுரு: நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாத படிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,

கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான் அப்.10:48.

7. ஞானஸ்நானத்திலே இயேசுவோடு அடக்கம் பண்ணப்படுகிறோம்

ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் கொலோ.2:12.

IV. தேவனுடைய பிரசன்னம்

அவர்கள் இரவும் பகலும் வழி நடக்கக்கூடும்படிக்கு கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.

பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினி ஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப் போகவில்லை. யாத்.13:21,22

ஒரு ஜெபவீரர், ஜெபத்தை நான்கு விதமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். இதற்கு ஆக்ட்ஸ் முறை (ACTS Method) என்று கூறலாம்.

A for Adoration - **துதி செய்வது, போற்றுவது**

C for Confession - **பாவ அறிக்கை செய்வது**

T for Thanks giving - **பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக நன்றி செலுத்துவது**

S for Supplication - **விண்ணப்பம் பண்ணுவது**

ஜெபிக்க உட்கார்ந்ததும் முதலில் தேவனைப் போற்றி துதிக்க வேண்டும். நமது தேவன் துதிக்குப் பாத்திரர். துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர். அதிகமாக ஸ்தோத்திரம் செலுத்தச் செலுத்த நம்மைத் தெய்வ பிரசன்னம் சூழ்ந்து கொள்ளும். தெய்வ பிரசன்னத்திற்குள் வந்தவுடன் நமது பாவங்கள் உணர்த்தப்படும். உடனே நம்மை ஆராய்ந்து குற்றங்களை அறிக்கை (Confess) செய்ய வேண்டும். மூன்றாவதுபடி, தேவன் நமக்குச் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தி ஸ்தோத்திரம் செய்வதாகும். (Thanks giving) தேவன் நமக்கு செய்த உபகாரங்களுக்குப் பதிலாக நாம் ஸ்தோத்திரத்தைத் தவிர வேறொன்றையும் செலுத்த முடியாது. இறுதியாக விண்ணப்பங்களை ஏறெடுக்க வேண்டும்.

ஆண்டவரோடு பேசப் பேச அன்பு அதிகரிக்கும். அன்பு அதிகரிக்க அதிகரிக்க பேசும் நேரம் **(ஜெப நேரம்)** அதிகரிக்கும். அவர் சமுகத்தை விட்டு போக மனமே வராது.

அடியேனுடைய அனுபவம்

முதலாவது தேவனுடைய பிரசன்னம்

Father we adore you
Lay our lives before you
How we love you

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

Jesus we adore you
Lay our lives before you
How we love you

Spirit we adore you
Lay our lives before you
How we love you

பிதாவே பக்தியுடனும் அன்புடனும் உம்மை ஆராதிக்கிறேன்
என்னுடைய வாழ்க்கையை உமக்கு முன்பாக அர்ப்பணிக்கிறேன்
நான் எவ்வளவாய் உம்மை நேசிக்கிறேன்

தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கிறீர்களா?

தேவனுடைய பிரசன்னத்தில் அமர்ந்து இருக்கிறீர்களா?

தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்கிறீர்களா?

Are you entering into the presence of God?

Are you enjoying the presence of God?

இரண்டாவது, அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக அழுது கதறுவது

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" ரோமர்.8:26.

கதறும் ஆத்துமா கணக்கில்லை
அழியும் ஆத்துமா கோடா கோடி
இதையே எண்ணி நீ பார்ப்பாயா? -2

நரகத்தின் அகோர தரிசனத்தை பாவிகள் காண வேண்டுமென்று மீண்டும் மீண்டும் நாம் ஜெபிப்பது முற்றிலும் தவறு, மாறாக பாவிக்குத் தேவையானது கல்வாரி தரிசனமே; பாடுபடும் இரட்சகர், கனிவுடன் அவனை மனந்திரும்ப அழைக்கும் தரிசனமே அவனுக்குத் தேவை. கல்வாரிக்குப் பிறகு அவன் ஏன் அழிய வேண்டும்?

24 மணி நேரம் நரகத்திற்கு மேல் தொங்கிக் கொண்டு அதன் நித்திய வேதனையைக் காணுவதற்குத் தன் இரட்சண்ய சேனை (Salvation Army) வீரர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமானால், தான் நிச்சயம் அவ்விதம் பயிற்சி கொடுத்தே தீருவேன் என்று இரட்சண்ய சேனையின் ஸ்தாபகர் வில்லியம் பூத் கூறுவாராம்.

"நரகத்தின் காட்சியை ஒரு நொடி பார்த்து விட்டால் நாம் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக கதறாமல் இருக்க முடியாது."

இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலர் தேவனை ஆரவாரத்தோடு ஆராதிக்கும் பரவசத்தில் லயித்துப் போய் இருப்பதால் பாவத்தில் மரிப்பவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களே என்ற சிந்தையின்றி வாழ்கிறார்கள் வெளி. 21:8.

ஆம், நாம் வானத்தையே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில், பாவிகள் பாதாளத்திற்குள் சென்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நரகமாகிய உண்மை ....

டாக்டர் ஜான் R. ரைஸ்

உலகத்திலேயே மிகவும் கொடூரமான திடமான சத்தியம் நரகமே. வேதம், நரகத்தின் உபதேசத்தை சந்தேகத்திற்கிடமின்றி கூறுகிறது. யாருமே பேசாதது போல பேசிய, சாந்தமும் மனத்தாழ்மையுமான, மன்னிக்கும், சுகப்படுத்தும், ஆறுதல் படுத்தும் இயேசு கிறிஸ்துவே மறுபடியும் மறுபடியுமாக நரகம் என்ற இடத்தைக் குறிப்பிட்டார். இதைக் குறித்து வேதத்தில் அதிர்ச்சி தரக் கூடியத் தகவல்கள் அவரது உதடுகளிலிருந்தே பொழியப்பட்டன.

நரகத்தில் புழு சாவதுமில்லை, அக்கினி அவிவதுமில்லை என்று கூறியது இயேசுவே.

ஆத்துமாவும் உடலுமாக நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்றது இயேசுவே.

ஜீவாலைகளில் புழுவாய்த் துடித்துக் கொண்டு வேதனையினால் தனது கண்களை ஏறெடுத்து தனது நாவு நனையும்படியாக ஒரு சொட்டு குளிர் நீருக்காய் கெஞ்சிய அந்த நாசமாக் கப்பட்டப் பணக்காரனின் கதறல்களை நாம் கேட்கும்படியாக நரகத்தின் மூடியைக் காட்டினவர் இயேசுவே!

லூக்.16:23,24 பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிற போது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.

அப்பொழுது அவன் தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசருவின் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜீவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.

விசுவாசியே, தேவனுடைய பிள்ளையே இந்த கதறல் உங்களுடைய காதுகளில் விழுகிறதா?

ஆத்தும இரட்சிப்பிழந்தவர்
ஆயிரம் ஆயிரமாய்
அன்றாடகம் இந்த மண்ணடியில்
அழிந்து சாகின்றாரே

பாவம் பெருகுதே
பாரும் பரன் இயேசுவே
அழியும் மனுக்குலம்
அதையும் இரட்சிப்பீரே!

மூன்றாவதாக....

1. உங்களுக்காக
2. உடன் ஊழியர்களுக்காக
3. ஊழியங்களுக்காக
4. உறவினர்களுக்காக
5. உலக நண்பர்களுக்காக

அருமையான வாசகர் ஒருவர் அனுப்பிய கடிதத்தை கீழே அச்சிடுகிறேன்:

ஐயா,

எங்கள் வாழ்த்துக்கள். இத்துடன் உங்கள் ஊழியத்திற்காக ரூ.500/- அனுப்பியுள்ளேன், பெற்றுக் கொள்ளவும். உங்களுக்காகவும், ஊழியத்திற்காகவும் தினமும் ஜெபித்து வருகிறேன். எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

Dr. R.J.J.A., Chennai

இப்படிப்பட்ட வாசகர் அனைவருக்காகவும் நான் ஆண்டவரை அதிகமாக துதிக்கிறேன். உங்களுக்காக ஜெபிக்கிறேன், ஊழியர்களுக்காக ஜெபிக்கிறேன். ஊழியங்களுக்காக ஜெபிக்கிறேன்.

V. தேவனுடைய ஜனத்தின் பாவம்

1. விக்கிரக ஆராதனை

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; யாத்.20:4,5.

அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக் கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக் குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள் யாத்.32:4.

அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக் குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள் சங்.106:19.

ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, **விக்கிரகாராதனையான பொருளாசை** ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் கொலோ.3:5.

2. பாலின பாவம்

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள் எண்.25:1.

3. அவிசுவாசம்

அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுவதும் அழுது கொண்டிருந்தார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி: எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? எண்.14:1,11

VI. தேவனுடைய கோபம்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்.

ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும் நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டு விடு, உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார் யாத்.32:9,10.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

VII. தேவனுக்கு முன்பாக நின்ற மனிதன்

மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன?

மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின் மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்கு செய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப் பண்ணினார் என்று எகிப்தியர் சொல்வானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்கு செய்யாத படிக்கு, அவர்கள் மேல் பரிதாபங் கொள்ளும்

என்று கெஞ்சிப் பிரார்த்தித் தான் யாத்.32:11-13

மறுநாளில் மோசே ஜனங்களை நோக்கி: நீங்கள் மகா பெரிய பாவஞ் செய்தீர்கள்; உங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப்போகிறேன் என்றான்.

மோசேயின் ஜெபத்தை மூன்று பகுதியாக பிரிக்கிறேன்:

1. அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப் போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்.

2. ஆகிலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னியும்;

3. இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப் போடும் என்றான்.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, **நம்முடைய தேச ஜனங்கள்** மகா பெரிய பாவம் செய்கிறார்கள் அல்லவா, நீங்கள் மோசேயைப் போல ஜெபிக்கிறீர்களா?

ஆகையால் அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காத படிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலே நின்றான் சங்.106:33.

தேசத்தை தேவன் அழிக்காத படிக்கு திறப்பிலே நிற்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

விசுவாசி தூய ஆவியானவரை சொந்தமாக்கிக்கொண்டிருப்பதற்கும், தூய ஆவியானவர் விசுவாசியை சொந்தமாக்கிக் கொண்டிருப்பதற்கும் வேறு பாடு உண்டு. விசுவாசியிடம் தூய ஆவி இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் துக்கமான காரியம் என்னவென்றால் தேவ ஆவியானவர் விசுவாசியை சொந்தமாகக் கொள்ளவில்லை.

உங்கள் தனிப்பட்ட எழுப்புதல் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறார்கள். ஆனால் வாழ்வில் தேவனுடைய கிரியையினைக் காணவும், ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டு நிரப்பப்படவும், எழுப்புதலை அனுபவிக்கவும், ஒரே வழி அவருக்காகப் பசிதாகம் கொள்வதே. "பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" (யோ.17:37) என்றார்.

விசுவாசி தூய ஆவியானவரை சொந்தமாக்கிக் கொண்டிருப்பதற்கும், தூய ஆவியானவர் விசுவாசியை சொந்தமாக்கிக் கொண்டிருப்பதற்கும் வேறு பாடு உண்டு. விசுவாசியிடம் தூய ஆவி இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் துக்கமான காரியம் என்னவென்றால் தேவ ஆவியானவர் விசுவாசியை சொந்தமாகக் கொள்ளவில்லை.

அதிகமான ஆழங்களும் உயரங்களும்

மகிமையின் தேசத்தை அடைந்தபின் திரும்பிப் பார்த்து, தேவன் நம்மிடம் எதிர்ப்பார்த்தவைகளை நாம் செய்யவில்லை என்றும் ஏமாற்றமடைந்த தாழ்நிலை கிறிஸ்தவர்களாகவும் வாழ்ந்தோம் என்பதையும் நாம் கிறிஸ்துவுக்குள் கோடீஸ்வரர்களாக வாழத் தவறி விட்டோம் என்பதையும் பார்ப்பது இருதயத்தை நொறுக்குவதாயிருக்குமே. நம்மால் மறுக்கப்பட்ட தூய ஆவியானவர் தான் ஒரு விசுவாசியை கிறிஸ்துவுக்குள் ஐசுவரியவானாக்கி, தெய்வீக வல்லமையை விளங்கப் பண்ணுவார்.

கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டு, மகிமையின் தேசத்திற்குப் பிரயாணம் பண்ணுகிற நாம் அரைமனதோடு தூரமாகப் பின் செல்கிறோம். ஆத்தும ஆதாயம் செய்யாமல், ஆத்தும பாரமில்லாமல், தேவ வசனத்தின் மேல் வாஞ்சையும் தாகமுமில்லாமல், கிறிஸ்துவுக்குள் முழுமையான வாழ்வை வாழாமல் இருக்கிறவர்கள் மகிமையின் சுவிசேஷத்துக்கு எதிரானவர்கள். ஆண்டவருடைய நறுமணத்தை அவர்கள் பரப்பவில்லை. இதற்கு ஒரே நிவாரணம் ஆவியால் நிரப்பப்படுவது மட்டுமே. அப்போது வாழ்வு வல்லமையுள்ளதாகவும் இரட்சகருக்கு சாட்சியாகவும் இருக்கும்.

கீழ்ப்படிதலின் சோதனைகள்

The tests of Obedience

Gregory Mantle (1853-1925)

தேவனுடைய அனேக பிள்ளைகள் சோதனைக்குள் இருக்கிறார்கள். சிலர் கனத்தோடு கடந்து செல்லுகிறார்கள், சிலரோ திரும்பிச் சென்று தங்கள் பாடங்களை மறுபடியும் கற்கிறார்கள். தெய்வீக நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் அனேகர் இந்த இக்கட்டான ஆவிக்குரிய சரித்திரத்தில் தோற்று விடுகிறார்கள். அவர்கள் யோபுடன் சேர்ந்து, "நான் கடந்து போகக் கூடாதபடிக்கு அவர் என் பாதையை வேலியடைத்து என் வழிகளை இருளாக்குகிறார்" (யோபு 19:8) என்று கண்ணீர் விடுகிறார்கள். தாங்கள் எடுத்திருக்கும் நிலை மறுபடியும் மறுபடியும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது என்பதை அவர்கள் உணர்ந்தறிவதில்லை.

மேடம் கியோன் என்பவர், "தேவன் நமது அர்ப்பணம் உத்தமமானதா அல்லவா என்று சோதித்துப் பார்க்க தருணங்களைத் தருகிறார். ஒருவனும் முழுவதுமாக அர்ப்பணிக்காமல் கர்த்தருக்கு சொந்தமாவதில்லை. தான் முழுவதுமாக அர்ப்பணிக்கப்பட்டிருப்பதை துன்பங்களின்றி அறிய முடியாது. அதுவே சோதனை."

"தேவனுடைய சித்தம், சந்தோஷத்தை அளிக்கும் போது சாதாரண மனிதனுக்கும் அது எளிது. ஆனால் புதுப்பிக்கப்பட்ட மனிதன், மார்க்கப் பற்றுள்ள மனிதன் போன்றவர்களைத் தவிர அது பாதையின் குறுக்கே வந்து எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் அளித்து துக்கத்தால் வருந்தும் போது தெய்வ சித்தத்தில் மகிழ்ந்திருக்க முடியும். சோதனை அதினால் ஒதுக்கப்படுவதை விட பரிசோதனையாக வரவேற்கப்பட வேண்டும்."

அன்பானவர்களே ஆறுதல்கள் கடந்து போகும் ஆனால் உண்மையான நிலைத்திருக்கும் ஆறுதல் சிலுவையை நேசிக்கும் அன்பில் தானிருக்கிறது. சிலுவையை வரவேற்காதவன் தேவனை வரவேற்க முடியாது.

பல தடவைகள் தேவனிடம் உறுதியாக, "நான் என்னை முற்றிலும் உமது கரங்களில் தருகிறேன், உமது சித்தமானபடி செய்யும், வேலை செய்யவோ, பாடுபடவோ, என்னை பயன்படுத்தும் அல்லது உமக்காக பிரித்தெடுத்து உயர்த்தும், கால்களின் கீழ் உமக்காக மிதிக்கப்படட்டும். நான் நிறைவாகவோ, குறைவாகவோ இருக்கட்டும். உமக்காக இருதய பூர்வமாக உமது விருப்பத்திற்காக விட்டு விடுகிறேன் என்று பலர் சொல்லி விடுகிறார்கள்."

நாட்கள் செல்லும் போது தேவன் நமது வார்த்தைகளில் நம்மைப் பிடிக்கிறார். அவரது பள்ளியில் பல மாதங்கள் அல்லது பல வருடங்கள் நல்ல சுயாதீனமும், சந்தோஷமும் தருகிறார். 'விசாலமான இடத்தில்' ஆசீர்வாதமாக நமது கால்களை உறுதிப்படுத்துகிறார். திடீரென கடுமையான பாடுகள் இந்த சந்தோஷமான அனுபவங்களுக்கிடையில் வந்து விடுகின்றன. அமைதலான வானத்தினடியில் சென்று கொண்டிருக்கும் வள்ளம் திடீரென

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

புயலால் தாக்கப்படுகிறது. அதன் உறுதி அதிக அளவாக சோதிக்கப்படுகிறது.

இத்தகைய காலங்களில் அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொல்லும் ஆறுதலான வார்த்தைகள்: "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது". (யாக்.1:2-4)

பலவிதமான சோதனைகள் சூழ்கின்ற ஒரு நிலை சமாதானம், ஆறுதல் வெளிப்படையான முன்னேற்றம் இவைகள் சூழ்ந்திருக்கும் போது திடீரென நாம் சோதனைகளின் திரளாலே தாக்கப்படுகிறோம்.

நாம் எதிரிகளால் திகிலடைந்து, கர்த்தருடைய தண்டனையை உதாசீனம் பண்ணி, அவர் நம்மைத் திருத்துவதால் களைப்படைந்து மூர்ச்சித்துப் போகிறோம். இந்த சோதனைகளிலிருந்து தடுக்கப்பட தேவன் தமது சித்தத்தை நமக்குத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார். நமது மனப்போக்கு எப்படி இருக்கவேண்டும் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். அவருடைய அளவில்லா அன்பின் சத்தத்தைக் கவனிக்க வேண்டிய சமயம் இது.

அவர் பேசுவதை ஏசா.43:1-3 வசனங்களில் காண்க: "இப்போதும் யாக்கோபே, உன்னை சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே, உன்னை மீட்டுக் கொண்டேன், உன்னை பேர் சொல்லி அழைத்தேன், நீ என்னுடையவன், நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜூவாலை உன்பேரில் பற்றாது. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்". (ஏசா.43:1-3)

நமது பாதுகாவல் நமது ஆத்துமாவின் அமைதலிலிருக்கிறது. விசுவாசத்திற்குப் பதிலாக பயத்திற்கு இடங்கொடுக்கும் போது அமைதலற்றவர்களும் புரட்சி செய்கிறவர்களுமாயிருந்தால் அக்கினியால் சேதமடைவோம் ஏமாற்றமும் வேதனையுமே அதன் பலன்.

தேவ அன்பின் ஒரு நிரூபணத்தை சோதித்தல்

சோதனை என்பது அவரது அன்பு, நம்பிக்கை என்பவற்றிற்கு நிரூபணமாகும். நமது உறுதி, அமைதி ஆகியவை அவருக்கு சந்தோஷத்தை அளிக்கின்றன. நாம் சோதிக்கப்படாமல் விடப்பட்டால் நமது ஆவிக்குரிய வாழ்விற்கும் அனுபவத்திற்கும் அது பாராட்டுவதற்குரியதாகாது.

அதிக சோதனைகளும் பாடுகளும் தேவன் நம்மீது வைத்திருக்கும் பற்றுறுதியைக் காண்பிக்கின்றன. நாம் சகிப்பதற்கேற்ற பெலனுள்ளவர்களும், அவரது கரிசனை வெளியே தெரியாத படி இருந்தாலும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்று நம்புகிறார். அவர் சோதனைகளைக் குறைப்பதற்குப் பதிலாக அவற்றைப் பெருகச் செய்கிறார். அது நம்மீதுள்ள நம்பிக்கைக்கு ஒரு அடையாளம். இன்றும் அதிக வெப்பமான நெருப்பில் கடந்து போகச் செய்து, அவரை மகிமைப் படுத்த நம்மை அழைக்கிறார்.

நாம் பயப்பட வேண்டாம். சுயநல வாழ்வு வெளிப்படுத்தப்பட்டு, வெறுக்கப்பட வேண்டியவைகள் அழிக்கப்படும். நாம் வெளிப்படையானதும் கடந்து போகிறதுமானவற்றிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு, தேவனோடுள்ள ஐக்கியத்தில் மிகவும் நெருக்கமடைவோம்.

நாம் கூர்மையான ஒரு கத்தியை உபயோகிக்கிறோமானால் அதன் கூர்மை ஒரு கடின முறையில் தான் பெறப்பட்டது. மிகச் சிறந்த உருக்கு (Steel) தயாரிக்கப்பட அது மிக அதிக வெப்பத்திற்கும் மிகத் தாழ்ந்த குளிர்ச்சிக்கும் உட்படுத்தப்பட வேண்டும். அந்த சிறிய தகடு சூடாக்கப்பட்டு பின்பு சுத்தியால் அடிக்கப்பட்டு, மறுபடியும் சூடாக்கப்பட்டு, பின்பு மிகுந்த குளிரான தண்ணீரில் இடப்பட்டால்தான் சரியான வடிவத்தையும் உறுதியையும் பெறுகிறது. இந்த முறைகளுக்குட்படுத்தப்படும் போது அது உடைந்து போனால் அது நம்முடைய கரங்களிலில்லை. பழுதற்ற அந்த கத்தியை அரை கல்லில் போட்ட பிறகு அதில் எதாவது தவறு காணப்பட்டால் முன்பு அது பழுதற்றதாக எண்ணப்பட்டாலும் பயனற்றதாக எறிந்து விடப்படும்.

எனவே அவரது உயரிய சேவைக்காக நம்மை ஆயத்தப்படுத்த ஆயிரம் வழிகளில் நம்மை சோதிக்கிறார். எல்லா சோதனைகளும் விதிவிலக்கின்றி செய்யப்படும். சுத்திகரிப்பதற்காக அழுக்குகளை அகற்றி, சோதித்து பின்பு ஆமோதிக்கப்படும். இப்போது நாம் துன்பத்தின் சூளையில் சூடாக்கப்பட்டு ஏழு மடங்கு வெப்பம் அதிகரிக்கப்படுகிறது. பின்பு மிகவும் குளிரான தண்ணீரில் இடப்படுகிறோம். பின்பு எதிரிடைகள், அழிவுகள் போன்ற இரு கற்களுக்கிடையே அரைக்கப்படுகிறோம்.

வெளியே வருவது எப்படி? நாம் எப்படி சகிக்கிறோம் என்பதைச் சார்ந்தது அது. "தேவ சித்தம் நிறைவேறட்டும், மிக அதிக வெப்பமான சூளையிலும் அமைதியாக நிற்பேன்" என்று நீங்கள் சொன்னால் தமது ஊழியக்காரர் நடுவில் கனப்படுத்தி அழியாத மகிமையால் முடிசூட்டுவார்.

"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார். அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்". (யோபு:23:10) புல்லும் வைக்கோலும் நெருப்புக்குப் பயப்படும். ஆனால் பொன்னோ நெருப்புக்கு சவால் விடும்.

உமது பொன் சூளையில் இடப்படட்டும்
உமது சிவப்பான பொன் விலையேறப் பெற்றதும் பிரகாசமானதுமாம்
அது கோபமான அக்கினிக்கு பயப்படாது
அது ஏராளமான எரியும் விளக்குகளோடே இருந்தாலும்
உமது பொன் விலையேறப் பெற்றதாகத் திரும்ப வரும்
எப்பக்கமிருந்து நெருப்பு வந்தாலும்
பொன் நெருப்பால் சோதிக்கப்பட வேண்டும்
இருதயமும் வேதனைகளால் சோதிக்கப்பட வேண்டும்

அப்போஸ்தலனாகிய யாக்கோபு சோதனையின் நோக்கத்தை "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி..." (யாக்.1:4) என்று குறிப்பிடுகிறார். ஒரு பூரணமான இயந்திரம் அது எதற்காக செய்யப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் 'ஒரு பூரண கிறிஸ்தவன்'. அவன் என்ன நோக்கத்தோடு கிறிஸ்தவனாக வைக்கப்பட்டானோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

ஒன்றிலும் குறைவுபடாதவர்களாகவும் பூரணராயும் என்பது நமது சோதனைகள் சரியானபடி ஒழுங்குபடுத்தப்பட்டு கவனிக்கப்படுவதைக் குறிக்கும்.நமது நல்லொழுக்கம் அனைத்தையும் அதனதனிடத்தில் அமைக்கும் ஒழுக்கமாகும்.

எவ்வளவு வேதனையளிப்பதாயிருந்தாலும் இறுதியில் நன்மையைத் தரும். இந்த அனுபவத்திலிருந்து நாம் விலகக்கூடாது. ஏனெனில் இந்த அனுபவம் கிறிஸ்துவில் நாம் முதிர்ச்சியடையவும் ஒரு கிறிஸ்தவன் சொந்தமாக்கிக் கொள்வதற்கும் அனுபவிப்பதற்கும் வழிவகுக்கும் போது பாடு அனுபவிப்பதும் எவ்வளவு கடுமையாயினும் சகிப்பதும் தகுதியானது. "இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும், அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையு முண்டாகக்காணப்படும்".(1 பேது.1:6-7)

தேவன் நமது உறுதியை விரும்புகிறார்

சோதனை நேரங்களில் அவருடைய வழிகளை புரிந்து கொள்ளுவதைவிட அவர் மேல் நம்பிக்கையாயிருப்பதை விரும்புகிறார். அவரோடுள்ள நித்திய உறவுக்காக நம்மை ஒழுங்குப்படுத்துகிறார். ஏனெனில்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை". *(1யோ.3:2)* பயங்கரமான அக்கினிச் சூளையில் சந்தோஷமாக நிற்போம், ஏனெனில் நாம் எதையும் இழந்து போக மாட்டோம், நமது கட்டுகள் மட்டுமே அறுந்து போகும், தேவகுமாரன் நம்மோடு உலாவுவார் என்பதை அறிந்திருக்கிறோம்.

நம்மைப் பரிபூரணப்படுத்தவும், சுத்தீகரிக்கவும் செய்யும் போதும் ஏற்படும் வேதனையைக் குறித்து ஆச்சரியப்பட வேண்டாம். இது தான் தேவனுடைய கரத்தின் கிரியை என்பதை நினைவில் கொள்வோம். இவ்வுலகத்தில் நாம் சேர்த்து வைத்திருக்கிற, பின் தொடருகிற அனைத்தும் மறைந்தும் அழிந்தும் கொண்டிருக்கின்றன.

நல்லொழுக்க குணங்கள் தூய ஆவியானவரின் வழி நடத்துதலின் தூண்டுதலினாலும் கட்டி எழுப்பப் படுகிறது. அது தேவனுடைய அழியாமையைப் பகிர்ந்தளிக்கிறது. ஏனெனில் தெய்வீகதன்மை அவதாரமாய் மனிதனில் வெளிப்பட்டது.

தேவன் எந்த விலையுமின்றி இதை நம்மில் உருவாக்குகிறார். அவரது நோக்கம் நன்கு நிறைவேறுமிடத்தில் நம்மை வைக்கிறார். நாம் சில வேளைகளில் நாம் வைக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையைக் குறித்து பராது சொல்கிறோம். ஆனால் தேவன் தாமிருக்கு மிடத்தில் நம்மை வைக்கும் போது உலகம் முழுவதிலும் அனேக தெரிந் தெடுப்புகள் திறந்திருக்கின்றன. வேறு சூழல்களில் அவரது நோக்கம் நன்கு நிறைவேற முடியுமா? அப்படியானால் அவர் அத்தகைய இடங்களில் நம்மை வைத்திருப்பார்.

அவருடன் ஒத்துழைத்து நன்றியுடன் நமது இரட்சிப்புக்காக உழைப்போம். வைரமானது அதை வெட்டுகிறவனைத் தடுக்கமுடியாது. களிமண்ணானது குயவனிடம் புத்திமதி கூற முடியாது. எனவே நாம் தடை செய்கிறவர்களாக அல்ல நமது மழுமன தோடு அவருக்கு நம்மை ஒப்புவித்து செயல்படுவோம்.

உட்காரு – பின்பு நட

Sit- Then Walk

F.J. Huegal

கிறிஸ்தவன் முதலாவது கிறிஸ்து வோடு மரணத்திலும் உயிர்தெழுத லிலும் பங்குகொண்டு, பின் பரத்துக் கேறிய அவரோடு உன்னதங்களிலே அவரோடு உட்காரவைக்கப்படுகிறான். பின்பு அவன் தேவனுடைய பிள்ளையின் குணாதிசயத்தோடு அவர் நடந்தபடி நடக்க ஆரம்பிக்கிறான். பவுலின் நிருபங்களில் இது உறுதிப் படுத்தப்படுகிறது. நீங்கள் நடக்க வேண்டியவிதமாக நடக்கும் போது. சென்று சேர வேண்டிய இடத்தில் சேருவீர்கள். அவ்வாறு சென்று சேர்ந்த பின் நீங்கள் அன்பில் நடவுங்கள்.

முதலாவது தேவன் உங்களை எங்கு வைத்திருக்கிறார் என்று உணர்ந்து பாருங்கள். உயிர்தெழுந்த ஆண்டவ ரோடு அவர் அனுபவிக்கிற தயவை அனுபவியுங்கள். நீங்கள் குடும்ப சாயலின் முத்திரையை சுமந்துக் கொண்டு நடக்கிறீர்கள். நீங்கள் ஒரு ராஜா என்ற உண்மையை புரிந்து கொள்ளுங்கள். எனவே உங்கள் ஆண்டவரின் ராஜரீகத்தைப் பகிர்ந்து கொண்டு நடவுங்கள். நீங்கள் செய்வ தெல்லாம் வாய்க்கும். உங்கள் முகத் தோற்றம் பரதீசின் ராஜரீக தன்மையை வெளிப்படுத்துவ தாயிருக்கும்.

நாம் **கொலோசேயருக்கு** வருவோம், பவுலின் நிருபங்களைப் போல அது உபதேசமாகவும் தொடர்ந்து பயிற்சி யாகவுமிருக்கிறது. கிறிஸ்தவனுடைய நடையைப் பற்றி, அவனுடைய நிலையின் உண்மைகள் தெளிவாகக் கூறப்படுமட்டும் பேசப்படவில்லை.

அவன் அந்தகார சக்தியிலிருந்து தேவனுடைய அருமை குமாரனுடைய ராஜ்யத்துக்கு மாற்றப்பட்டான். *(கொ.1:13)*

அவன் வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்திரத்திற்கு பங்காளி ஆனான். *(1:12).*

அவன் கிறிஸ்துவின் இரத்தத் தினால் மீட்கப்பட்டு, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டான் *(1:14).*

ஒரு காலத்தில் தேவனுக்கு விரோதியாயிருந்து, பொல்லாத கிரியைகள் நிறைந்தவனாயிருந்தான். ஆனால் அவன் மீட்பரின் சிலுவை இரத்தத்தால் நல்மனம் பொருந்தி சமாதானத்தைப் பெற்றுக் கொண்டான். *(1:20,21).*

பிதாவுக்கு முன் பரிசுத்தமுள்ள வனும் குற்றஞ் சாட்டப்படாதவனும் கிறிஸ்துவின் சபை (சரீரம்) மாம்சம் மரணமடைந்தபடியால் கிறிஸ்துவின் பார்வையில் குற்றமற்றவன். *(1:22)*

கிறிஸ்துவாகிய மகிமையின் நம்பிக்கை அவரில் வாசம் பண்ணுவது எவ்வளவு ஐசுவரியமும் மகிமையுமான இரகசியம். *(1:27)*

"ஆகையால் நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட படியே அவருக்குள் வேர் கொண்டவர் களாகவும் அவர் மேல் கட்டப்பட்டவனை வும் அவருக்குள் நடந்துக் கொண்டு..." *(2:6)*

கிறிஸ்தவன் கிறிஸ்துவில் பூரண மானவன். ஏனெனில் அவர் சகல துரைத் தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தலைவர் *(2:10)*

அவன் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடெழுந்தவன். விசுவாசத்தின் மூலம் தேவன் கிரியை செய்கிறார். *(2:11-13)*

அவன் கிறிஸ்துவோடு மரித்த படியால், அவன் உலகிலுள்ள தவறான வழக்கங்களில் தன்னை ஈடுபடுத்தக் கூடாது. *(2:20-23)*

கிறிஸ்துவுடனே எழுந்தபடி யால் அவனது பாசங்கள் மேலான காரியங்களிலிருக்க வேண்டும். *(3:1-2)*

கிறிஸ்தவன் மரித்துவிட்டான் அவனுடைய ஜீவன் கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்கிறது. *(3:3)*

கிறிஸ்து அவனுடைய ஜீவனா யிருப்பதால் அவர் வரும் போது கிறிஸ் தவன் மகிமையில் அவரோடு காணப் படுவான். *(3:4)*

கிறிஸ்தவனின் நடை

(கொலோசேயர் 3,4 படிக்க) அவனது லௌகீக அவயவங்களை அழிக்க வேண்டும். கோபம், எரிச்சல், தூஷணம், அருவருப்பான தொடர் புகள், வாயின் கெட்ட வார்த்தைகள், போன்றவற்றை தள்ளி விட வேண்டும். பழைய மனுஷனையும் அவனது கிரியைகளையும் தள்ளிப் போட வேண்டும். தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட அவன் பரிசுத்த அன்பின் பாத்திரமாக இரக்கம், தயவு, தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை ஆகியவற்றைத் தரித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்து மன்னித்தது போல யாரோடாவது வழக்கு இருந்தால் அவர் களை மன்னிக்க வேண்டும். தேவ சமாதானம் அவன் இருதயத்தை ஆள வேண்டும். கிறிஸ்துவின் வசனம் அவனில் வாசம் பண்ணுவதால் எதைச் செய் தாலும் வார்த்தையாலோ செயலாலோ அது ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் செய்யப்பட்டு அதோடு பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தப்பட வேண்டும். ஜெபத்தில் தரித்திருந்து ஞானத்தோடு நடந்துக் கொள்ள வேண்டும். பேசுவது எப்போதும் கிருபை நிறைந்ததாகவும் உப்பால் சார மேற்றப் பட்டதாகவும் இருக்க வேண்டும்.

கிறிஸ்தவனின் நடை அவனது உன்னத நிலையின் கனி. பாவத்திற்கு மரித்த அவன் கிறிஸ்துவுடன் எழுப்பப் பட்டான். அவர் பரத்துக்கேறிய போது அவரது மகிமையின் பங்காளியாய் அவரோடு கூட உட்காருகிறான். எனவே, அவன் அதற்கேற்றபடி நடக்க வேண்டும்.

அவன் அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும் உன்னதங்களில் கிறிஸ்துவின் வாரிசு. ஒரு போதும் முடியாத தாகத்தால் நித்திய ஜீவ ஊற்றி லிருந்து அவன் பானம் பண்ணட்டும். அவனது சந்தோஷம் விவரிக்க முடியாதது. அவனது நன்றி அளவற்றது. அவனது நடை இளவரசனைப் போன்றது. அவன் ஒரு இளவரசன்.

தங்கள் பாவத்தை ஒத்துக் கொள்ள விரும்பாததும், ஒத்துக் கொள்ளாதது மான ஒரு தலைமுறையினரின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம்.

நமது பிள்ளைகளைக் கர்த்தருக்குள் பயிற்றுவிப்பது

Training our children in the Lord

Kim Butts

1. தங்கள் வாழ்வில் பாவம் இருப்பதை விரைவாகக் கண்டு கொள்ள பிள்ளைகளுக் குப் போதிக்க வேண்டும்.

தங்கள் பாவத்தை ஒத்துக் கொள்ள விரும்பாததும், ஒத்துக் கொள்ளாததுமான ஒரு தலைமுறை யினரின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவர்கள் தாங்கள் செய்த பாவம் அப்படிப் பெரிய தொன்றுமில்லை என்றும் அதனால் அது தேவனை அதிகமாகத் துக்கப்படுத்து வதில்லையென்றும் காண்பித்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் தாங்கள் பாவத்தில் மாட்டிக் கொள்ளும் வரைக்கும் அமைதி யாயிருந்து விடுகிறார்கள். இது நமது பிள்ளைகள் பின்பற்ற வேண்டிய மாதிரிகளல்ல. ஆனாலும் மக்கள் இதனையே பின்பற்றுகின்றனர். சிறிய பாவமாக இருப்பினும் தேவனையும் தூய ஆவியையும் துக்கப்படுத்துவதாக வும், அவரது பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாததாகவும் இருந் தால் அது பாவம் என்று பிள்ளைகள் அறிந்து கொள்ளுவது அவசியம். ஆயினும் ஆண்டவரது அன்பின் மன்னிப்பு, சுத்திகரிப்பு ஆகிய தன்மை களையும் அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத் தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார்" 1 யோவா.1:9.

2. பாவ அறிக்கை மனந்திரும்புதல் ஆகியவற்றின் தேவையைக் கருத்தாய் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.

பாவம் கண்டு பிடிக்கப்பட்ட வுடனேயே அது பரிகரிக்கப்பட வேண்டும். எனவே பிள்ளைகள் தாங்கள் பாவம் செய்து விட்டதை அறிந்ததும் உடனே அதனை அறிக்கை யிடக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். பாவத்தைக் குறித்த இந்த நுண்ணிய உணர்வு அவர்கள் வளர வளர அதிக விலையேறப் பெற்றதாயிருக்கும். தங்கள் பாவங்களைக் குறித்து மனஸ் தாபப்படுவது பிள்ளைகளுக்குப் போதிக்கப் படுவதற்கான ஒரு நல்ல போதனை. நாமும் கூட பாவத்தைக் குறித்து துக்கப்படுகிறவர்களாயிருக்க வேண்டும். அதன் மூலம் வருங்காலம் ஆசீர்வதிக்கப்படும்.

3. பிள்ளைகள் தேவனுக்கு முன்பாகத் தாழ்மையோடு வாழவும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தாழ்மையின்மையால் இந்நாட் களில் எழுப்புதல் ஏற்பட மிகுந்த தடை யாக உள்ளது. எனவே பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே தாழ்மையைத் தரித் துக் கொள்ள போதிப்பது அவசியம்.

4. விக்கிரகங்களைக் கண்டு கொள்ளவும், அவற்றை வெறுக்கவும் நமது பிள்ளை களுக்குப் போதிக்க வேண்டும்.

நமது பரம பிதாவுக்கு மேலாக எதுவும் நமது வாழ்வில் இடம் பெறக் கூடாது என்பதை நாமும் பிள்ளைகளும் அறிந்திருக்க வேண்டும். தேவனுக்கு எதிராளியான ஒன்று நமது இருதயத்தி லிருந்தால் நமது கவனம், வாழ்வின் பயபக்தி இவை மாறுபடுகின்றன. வாலிபர்களின் வாழ்வில் பல்வேறு வகையான விக்கிரகங்கள் நுழையலாம். பொழுதுபோக்குகள், விளையாட்டுகள், நண்பர் வட்டம், குடும்பப் பணிகள், சபைப் பணிகளிலுள்ள ஈடுபாடுகள் போன்றவை இதிலடங்கும். தேவனுக்கும், தேவ வசனத்துக்கும் செலுத்த வேண்டிய கவனத்தைச் சிதறடிக்கும் எதுவும் உடனடியாகக் கண்டுபிடிக்கப் பட்டு அதன் முக்கியத்துவம் குறைக்கப் பட வேண்டும். பிள்ளைகள் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கத்தக்கதாக அவர்களது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும்.

5. தேவனுடைய உள்ளத்தை அவர்கள் உத்தமமாகத் தேடும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

நம்முடைய இருதயங்களிலி ருப்பவைகளுக்காக ஜெபிப்பதும், தேவனுடைய இருதயத்திலிருப்பவை களுக்காக ஜெபிப்பதும் வேறுபட் டவை. இவை இரண்டும் இணையும் போது ஜெபம் வல்லமையுடையதும் பயனுடையதுமாகும். தேவ வசனத்தில் அதிக நேரம் செலவிடுவதும், அதன் மூலம் தேவ சித்தத்தை அவர்கள் வாழ்வில் அறிந்து கொள்வதும் இன்றி யமையாதவை என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொள்வது அவசியம். இவ்வுலக மக்களைப் போல வாழ்வதை விட்டு விட்டு, தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் துதியோடும், ஜெபத் தோடும், அமரிக்கையோடும், அவர் சமுகத்தில் வரும் போது, அவர்கள் உள்ளம் புதிதாக்கப்படும். தேவ சித்தத்தை அவர்கள் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள இது ஏதுவாகும். எந்தச் சூழலிலும் அவர்கள் யாருக்காக ஜெபித்தாலும் அது வெற்றியாக முடியும்.

6. இழந்து போனவர்களைக் குறித்த ஒரு பாரம் பிள்ளைகளில் ஏற்பட போதிக்க வேண்டும்.

பிள்ளைகள் வேதத்தைக் கருத் தாய்ப் படிக்கும் போது இழந்து போன வர்கள் மீது தேவன் வைத்திருக்கும் கரிசனையை உணர்ந்து கொள்வார்கள். அந்த பாரமின்றி எழுப்புதலுக்காக ஜெபிப்பது பயனற்றது. அறுவடையின் தேவன் அறுவடைக்கு வேலையாட் களை அனுப்பும்படி மத்.9:38, ஜெபிக் கும்படி பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.

7. துதிகளை ஏறெடுக்கும் வாழ்க்கை முறையை உருவாக்கப் பிள்ளை களுக்குப் போதிக்க வேண்டும்.

துதிகளில் பிரியப்படுகிற தேவன் பிள்ளைகள் துதிப்பதை அதிகமாக விரும்புகிறார். ஆனால் சிறு பருவத்தில் அதிகமாகத் துதிக்க விரும்பும் பிள்ளைகள் வளரும் போது அதில் பின்தங்கி விடுகின்றனர். தேவனின்றி நாம் நம்பிக்கையும் உதவியுமற்றவர்கள் என்பதை பிள்ளைகள் அறிய வேண்டும். மனந்திரும்பிய உதடுகளால் தாழ்மை யுடன் தேவனை மகிமைப்படுத்தும் பழக்கத்தை அவர்களில் உருவாக்க வேண்டும். பரலோக எழுப்புதலுக்கு அது வாசலைத் திறந்து தரும்.

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பத்திரிகை வரக் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

Contact:

VARUKAYIN THOOTHAN

7, Newport Street, W.C.C. Road,

Nagercoil - 629 001.

Kanyakumari District,

SOUTH INDIA.

Mobile: +91 095432 21008

Whatsapp: +91 094897 40295

email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

சோதனை நேரங்களில் அவருடைய வழிகளை புரிந்து கொள்ளுவதைவிட அவர் மேல் நம்பிக்கையாயிருப்பதை விரும்புகிறார்.

தாழ்மையின்மையால் இந்நாட்களில் **எழுப்புதல்** ஏற்பட மிகுந்த தடையாக உள்ளது.

துதிகளில் பிரியப்படுகிற தேவன் பிள்ளைகள் **துதி**ப்பதை அதிகமாக விரும்புகிறார்.

தேவனின்றி நாம் நம்பிக்கையும் உதவியுமற்றவர்கள் என்பதை பிள்ளைகள் அறிய வேண்டும்.

சிலுவையை வரவேற்காதவன் தேவனை வரவேற்க முடியாது.

சிங்காசனம் **சிலுவை** என்பதும் அவர் அதை விட்டுத் திரும்பக் கூடாது எனவும் அறிந்திருந்தார்.

அனுதாபம் ஒரு தந்திரமானது. கிறிஸ்துவின் வழி போல தெரிந்தாலும் அது மாம்சீகம். இயேசு பேதுருவின் அனுதாபத்தை மறுத்து விட்டார்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason